முருகப்பெருமான் துணை

**மகான் அகப்பைச்சித்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**16.12.2023**, சனிக்கிழமை

1. அன்னதான தரும நெறியை
அகிலம் அடைய உணரவே
மண்ணுலகில் தரும சாலையை
மாதரும கிளைகளாக உருவாக்கி
2. உருவாக்கி எங்கும் தருமம் எதிலும் தருமமென
உயர்வான தருமசிந்தை பெருக
குருவாக மக்களுக்கு அருளுகின்ற
குருராஜனே ஆறுமுக அரங்கனே
3. அரங்கனே உமை போற்றியே
அகப்பைச்சித்தரும் துல்லிய ஆசி
வரங்களாக சோபகிருது தேள்திங்கள்
வல்லமைபட முப்பான் திகதி காரிவாரம்
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 30 ம் நாள், 16.12.2023, சனிக்கிழமை)
4. வாரமதில் உலகோர் நலம்பெற
வழங்குவேன் அரங்கன் கேட்க
சோரம்போகா அரங்கன் படை
சுத்த நெறி கொண்ட உலகமாக்கி
5. ஆக்கியே தரும ஞான பாதை
அகலா அனைவரும் நடந்து
ஊக்கமுடன் அரங்கன் காட்டும்
உண்மை நிறைந்த சத்ய ஜோதி அமைப்பு
6. அமைப்பு வழி ஆன்மீக ஞான
அரசியல் களம் மக்கள் கண்டு
அமைப்பான மக்களை காத்திடும்
ஆற்றல்மிக்க ஞானத் தலைமை

7. தலைமையை உருவாக்கி இனிதே
தலைவனாக முருகப் பெருமான்
தலைமைதனை களம்கண்டிட
தரணியில் ஞானிகள் முழங்க
8. முழங்கவே எங்கும் வரவேற்பு
முழுமைபட ஆதரவாக மாறி
கலங்கமற ஞான ஆட்சி
கலியினில் அரங்கேற்றமாகும்
9. ஆகவே இந்த மாற்றத்துக்கு
ஆன்மீக ஞான களத்துக்கு
மிகைபட மக்கள் உள்வந்து
மனமாயை நீக்கி இனிதே
10. இனிதே எல்லாம் அவன்செயல்
என் செயல் ஏதுமில்லையென
துணிவு கொண்டு முன்வந்து
தொடர்ந்து அரங்கனுடன் களம் காண
11. காணவே ஞான ஆட்சி மலரும்
கலியெனும் துன்பமான ஆட்சி
ஞானத்தால் விலகி ஓடியே
நம்பகமான நல்லாட்சி மலரும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–